Name of the Newspaper: Dinamani Date: 19.5.18

# சின்னமலை-டி.எம்.எஸ். மெட்ரோ ரயில் பாதையில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு

சென்னை, மே 18: சென்னை மெட்ரோ ரயில் பாதையில் பணிகள் நிறைவடைந்துள்ள சின்னமலை-ஏ.ஜி.டிஎம்எஸ் இடையிலான வழித்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் கே.ஏ. மனோகரன் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையில் நேரு பூங்கா-விமான நிலையம், சின்னமலை-விமான நிலையம், ஆலந்தூர்-பரங்கிமலை இடையே சுமார் 40 கி.மீ. தூரத்துக்கு தற்போது மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இரண்டாம் கட்டமாக நேரு பூங்கா-சென்ட்ரல் ரயில் நிலையம், சின்னமலை-ஏ.ஜி.டிஎம்எஸ் அலுவலகம் (தேனாம்பேட்டை) இடையிலான வழித்தட பணிகள் நிறைவடைந்துள்ளன. அதையடுத்து நேரு பூங்கா-சென்ட்ரல் ரயில் நிலையம் இடையிலான வழித்தடத்தில் கடந்த 13-ஆம் தேதி பாதுகாப்பு ஆணையர் ஆய்வு மேற்கொண்டார். மறுநாள் இந்த ஆய்வு நிறைவுபெற்றது. அதைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக அவர் சின்னமலை-ஏ.ஜி.டிஎம்எஸ் (தேனாம்பேட்டை) இடையிலான 4.5 கி.மீ. தூர வழித்தடத்தை ஆய்வு செய்யும் பணியில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டார்.




சின்னமலையில் வெள்ளிக்கிழமை மெட்ரோ சுரங்க ரயில் பாதையில் ஆய்வு செய்த ரயில்வே பாதுகாப்பு ஆணையர் கே.எஸ்.மனோகரன் தலைமையிலான குழுவினர்.

இந்த வழித்தடத்தில் டிராலியில் சென்று ஆய்வு மேற்கொண்ட பாதுகாப்பு ஆணையர் கே.ஏ.மனோகரனுடன் மெட்ரோ ரயில் அதிகாரிகளும் சென்றனர். சுரங்க ரயில் பாதையில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள், சாதனங்களின் செயல்பாடு, சிக்னல்களின் செயல்பாடு, பயணிகளுக்கான அவசரகால தொலைபேசி செயல்பாடு, பயணிகளுக்கு ரயில் பயணத்தின்போது தகவல் அளிப்பதற்கான சாதனங்கள், பயணிகளுக்கான தகவல் பலகைகள், பயணிகள் பயன்பாட்டுக்கு இரு ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள நகரும் படிக்கட்டுகள், லிப்டுகள் உள்ளிட்டவையும் இந்த ஆய்வில் இடம்பெற்றன. இந்த ஆய்வு சனிக்கிழமை நிறைவடைகிறது.

இந்த ஆய்வை அடுத்து ரயில்களை இயக்குவதற்கான ஒப்புதல் விரைவில் கிடைத்துவிடும். அதனால் இம்மாத இறுதிக்குள் நேரு பூங்கா-சென்டரல் ரயில் நிலையம், சின்னமலை--ஏ.ஜி.டிஎம்எஸ் (தேனாம்பேட்டை) இடையே ரயில்கள் இயக்கப்படும் வாய்ப்பு உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.